RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s736

# கு. அழகிரிசாமியின் அன்பளிப்பு சிறுகதையில் மானுட ஆழ்நெறிகள்

மு. மூர்த்தி [அ, *]

[அ] தமிழ்த்துறை, குரு நானக் கல்லூரி (தன்னாட்சி), வேளச்சேரி, சென்னை-600042, தமிழ்நாடு, இந்தியா.

# Ku. Azhagirisami's Anbalippu Short Stories Human Ideals

**M. Murthi** [a, *]

[a] Department of Tamil, Guru Nanak College (Autonomous), Chennai-600042, Tamil Nadu, India

* Corresponding Author: murthithamizh@gmail.com

Received: 12-12-2021
Revised: 02-05-2022
Accepted: 08-05-2022
Published: 29-07-2022

Check for updates

## ABSTRACT

The short story has a unique place in modern prose literary forms. In this way, after the innovator of the short story, it was writer Ku. Alagirisamy who took it to another platform. He is known as the greatest personality among Tamil short story writers. Even though his works are in many forms, it can be known that he has expressed the idea that the short story form has come to convey. He has written more than a hundred short stories. Short story collections such as Anpalippu, cirikkavillai, tavappayan, varappiracatam, kaviyum katalum, cevi caykka oruvn, putiya roja, Thuruvu etc. can be mentioned here. His short story collection 'Anbalippu' won the Sahitya Academy Award in 1970. Even though he was not alive when the award was presented, the 12 short stories in this collection of his short stories are still alive. Even after 52 years, these stories are relevant and comforting to today's situation. In the short stories of K. Alagirisamy, we can know the existence of ideals suitable for human life. Research paper is the symbol of those norms. The opening short story ' Anbalippu' depicts the psychological nature of children. The stories in this collection show the ideals for human life with psychological techniques. In particular, the short stories like Anpalupu, Raja Vantirukkirar, etc. are psychological techniques and reveal human ideals. Although he was not alive when the award was given, the 12 short stories included in this collection of his short stories are still alive today. Even after 52 years, these stories are relevant to today's situation, portraying the psychological nature of children and simple language.

**Keywords:** Ku. Azhagirisami, Anbalippu, Human Life, Human Ideals

## முன்னுரை

தமிழ் உரைநடை இலக்கிய உலகில் ஐம்பது வயதுக்கும் குறைவாக வாழ்ந்த இவர் ஆற்றியிருக்கும் தமிழ்ப்பணி குறிப்பிடத்தக்கது. 100க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியவர். பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுதி நூல்கள் அமைத்தவர். தன் படைப்புகளில் மானுட வாழ்வியலுக்கு உகந்த கருத்துகளைப் பொருண்மையாகக் கொண்டு நல் படைப்புகளை ஆக்கியவர். அவ்வகையில் 'அன்பளிப்பு' என்னும் சிறுகதைத் தொகுதி அன்பளிப்பு, ஏமாற்றம், ராஜா வந்திருக்கிறார், இரண்டு ஆண்கள், இரண்டு பெண்கள், சாப்பிட்ட கடன், கல்யாண கிருஷ்ணன், ஞாபகார்த்தம், அழகம்மாள், திரிவேணி, தேவ ஜீவனம், எங்கிருந்தோ வந்தார் ஆகிய 12 சிறுகதைகளை உள்ளடக்கியது. இவற்றுள், அன்பளிப்பு, ராஜா வந்திருக்கிறார் முதலான சிறுகதைகள் உளவியல் நுட்பத்துடனும் மானுட ஆழ்நெறிகளை உணர்த்துபவையாக உள்ளன. மேலும் இவரின் கதைகளில் எளிமையான போக்கினையும் நடைமுறை வாழ்வியலை ஒட்டிய நிலையினையும் பார்க்க முடிகிறது.

## மானுட ஆழ்நெறிகள்

'ஆறறிவதுவே அவற்றொடு மனனே' என்று தொல்காப்பியம் மனிதனுக்கு உரிய அறிவை வரையறுக்கிறது (Subramanian, 2003). 'மனம்' என்பதை வைத்தே மனிதன் அடையாளப் படுத்தப்படுவதும், பிற உயிர்களை அரவணைப்பதும் இவ்வறிவின் மூலமே ஆகும். அதிலும் குழந்தைகளின் மனநிலையைப் புரிந்து கொண்டு அதற்கேற்றவாறு நடந்து கொள்ளுதல் என்பது மிகவும் முக்கியமானதாகும். அதற்கேற்ற நிலையில், குறிப்பாகக் குழந்தைகளின் எதிர்பார்ப்பினை எவ்வாறு முழுமைப்படுத்துவது என்பதையும் இவரின் படைப்புகள் வழி அறிந்துகொள்ள முடியும். அவ்வளவில் அவரின் சிறுகதைகளில் கதை மாந்தர்களின் ஆழ் மன உணர்வுகளையும், அவ்வுணர்வுகளைப் பிறர் எவ்வாறு புரிந்துகொள்வது என்பதையும், அப்புரிதலை எவ்வாறு முழுமைப்படுத்துவது என்பதையும் படைப்புகள் வழி முறையே அறிந்து கொள்ளவும் முடியும்.

## அழகிரிசாமியின் படைப்புகளில் அன்பளிப்பு

அன்பளிப்பு சிறுகதைத் தொகுப்பு 1970 இல் சாகித்ய அகாதெமி விருதைப் பெற்றது. இச்சிறுகதைத் தொகுதி நூலில் பன்னிரண்டு சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. இதில் முதலில் இடம் பெற்றுள்ள 'அன்பளிப்பு' என்னும் சிறுகதையே, இக் கதையின் பொருண்மை கருதி நூலுக்குரிய பொதுத் தலைப்பாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது. இன்றைய சூழலில் வாசிக்கும் பழக்கம் பெரிதும் அருகிவிட்டது. அவற்றை குழந்தைகள் மூலம் மீட்டுருவாக்கம் செய்தல் வேண்டும் என்பதையும், பிறர் வாசித்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதையும் எழுத்தாளர் கூறும் கூற்றாக அன்பளிப்பு சிறுகதை அமைந்துள்ளமை சிறப்பாகும் (Alagirisami, 1967).

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பது போல உரிய வயதில் பெறுகிற அறிவு தனக்கு மட்டுமின்றி, உலகுக்கும் பயனுள்ளதாக அமையும். அவ்வடிப்படையில், 'அன்பளிப்பு' என்னும் சிறுகதை மூலம் குழந்தைகள் கற்கும் ஆர்வத்தைப் பெற வேண்டும் என்பதையும் அச்சூழலில் குழந்தைகளின் ஆழ் மனதைப் புரிந்து கொள்ள முடியும் என்பதையும் உணர்த்துகின்றார். திருக்குறளின் 'உருவுகண்டு எள்ளாமை வேண்டும்' என்பதையும், யார் ஒருவரையும் எளிதாக எண்ணிவிடக் கூடாது என்பதையும் இக்கதையின் மூலம் மிகத் தெளிவாக உணர்த்துகிறார். குழந்தைகளின் புறச்செயல்களை வைத்து அவர்களைப் பற்றிய முடிவுக்கு உடனே வந்துவிடக் கூடாது என்பதையும் யார் ஒருவரையும் மேலோட்டமாகப் புரிந்து கொள்ள முடியாது என்பதையும் தெளிவாக உணர்த்தியுள்ளார். 'பொன் குடத்திற்குப் பொட்டு வைத்தாற் போன்று' இத்தொகுப்பு நூலில் அடங்கியுள்ள கதைகளில் முதல் கதையான 'அன்பளிப்பு' என்னும் கதையே அனைத்து சிறுகதைகளுக்கும் முன்னோடியாக உள்ளது.

இம் முதல் கதை தான் நேரடியாகச் சென்னையில் எதிர்கொண்ட செயலின் ஆக்கமே என்றும் தன் சொந்த அனுபவத்தின் வெளிப்பாடு என்றும் அவரே கூறியுள்ளார் (Alagirisami, 1967).

## படைப்புகளில் கதைக்கரு

தன் கதைகளில் பெரும்பாலும் குழந்தைகளைக் கதை மாந்தர்களாக அமைத்து அவர்களின் உளவியல் போக்கினை இயல்பான நடையில் எடுத்துக் கூறியுள்ள முறைமை மிகவும் சிறப்பு. அப்படைப்புகளைக் கொண்டு சொல்லும் முறையிலும், குழந்தைகள் மனநிலையினை எதார்த்த நடையில் தெளிவாகக் காட்டியுள்ளார். இவரின் பெரும்பாலான கதைகளில் குழந்தைகளின் விருப்பு, வெறுப்பு, எதிர்பார்ப்பு, ஏக்கம், சிரிப்பு, அழுகை, பயம் முதலானவற்றைக் காண முடியும் (Alagirisami, 1967).

'அன்பளிப்பு 'என்னும் முதல் சிறுகதை வாசிக்கும் பழக்கத்தை அனைவருக்கும் ஏற்படுத்த வேண்டும் என்பதை மையமாகக் கொண்டுள்ளது (Alagirisami, 1967).

'நூலைப்படி' என்று பாரதிதாசன் கூறுவது போன்று வாசிப்புப் பழக்கத்தை அனைவருக்கும் ஏற்படுத்த வேண்டும். அப்பொழுது தான் பிறரை வாசிக்க வைக்கவும், நேசிக்கவும் முடியும்

என்பதையும் அறிந்து கொள்ளலாம். இவர்கள் தான் படிப்பார்கள் என்றும் மற்றவர்கள் படிக்க மாட்டார்கள் என்று யாரையும் உடனே எடை போட்டு விடக் கூடாது. வாய்ப்பு அமையின் அனைவரும் அத்திறமையை ஒரு சேரப் பெற முடியும். இப் பண்பிற்கு ஏற்ற பாத்திரமாகச் சாரங்கன் என்னும் பாத்திரம் படைக்கப்பட்டு தெளிந்த மனநிலை உடையவனாகவும், எதையும் சீர் தூக்கிப் பார்க்க முடியும் எனற எண்ணமுடையவனாகவும் அவன் வாழ்வியல் அமைவதை எழுத்தாளர் கதைகூறும் முகமாக, நகர்த்திச் செல்கிறார். இப்பாத்திரத்தை நகர்த்திய முறைமையால் அவன் செயல்பாடு முழுமையாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளமையை அறியலாம். இப்பாத்திரத்தின் உயிர்ப்புத் தன்மை கருதித் தங்கள் பிள்ளைகளுக்குச் சாரங்கன் என்று பலரும் பெயர் வைத்துள்ளமையைத் தமிழுலகம் நன்கு அறியும். இத்தகு குணம் உடைய குழந்தைகளை இனம் கண்டு அவர்களின் நல் வளர்ச்சியை உருவாக்குவது நம் கடமையாகும். இக்கூற்றை நிலைப்படுத்தவே கதையை நகர்த்திச் செல்வதைப் பார்க்க முடிகிறது (Alagirisami, 1967).

## கதைமாந்தர் அறிமுகம்

சிறுகதையில் வரும் கதைமாந்தர் அறிமுகமே அவர்களின் பண்பு நலன்களை நிலைப்படுத்துவதாக அமைகிறது. எழுத்தாளர் மாமா, உறக்கத்திலிருந்து எழாமை கண்டு தூங்கு மூஞ்சி மாமா என்று கூறி சித்ரா சிரித்தாலும், எவ்விதச் சலனமும் இல்லாமல் அமைதியாக இருந்த சாரங்கனின் செயல்பாடு நல் ஆக்கத்தைக் குறிப்பதாகவே உள்ளது. இதுவரை மௌனமாக இருந்த சாரங்கன் மாமாவை நோக்கி, வெகுநேரம் கண்விழித்துப்படித்தால் ஆகாது என்று புத்தகத்தில் போட்டிருக்கிறது மாமா என்று கூறுவதன் மூலம் அவனின் சமயோசித அறிவையும் யாராய் இருப்பினும் நற்செயலைக் கடைபிடிக்க வேண்டும் என்று உணர்த்துவதையும் அறிய முடிகிறது. அவனின் உணர்வைப் புரிந்து கொண்ட எழுத்தாளரும் மதிப்பளிக்கும் முகமாய் நாளை அவ்வாறே செய்கிறேன் என்று கூறியது சிறியவர்களின் கருத்துக்கு மதிப்பு கொடுக்கப்பட்டுள்ளதை உணர்த்துவதாக உள்ளது.

இதனைப் பிருந்தா, சுந்தரராஜன் பாத்திரங்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும். அவர்களின் செயல்கள் அத்தகைய மனநிலையைக் காட்டியன எனலாம். இவர்களினூடே சாரங்கன் மட்டும், எத்தகைய செயல்களையும் செய்யாமல் அமைதியாக இருந்த நிலையைப் பார்க்க முடிகிறது (Adhiyaman, 2011).

## அனைவரும் பெறுதல் எனும் பொது மனநிலை

பொருளாயினும், அறிவாயினும் பொதுமையில் அமையும் போது அனைவருக்கும் மகிழ்ச்சி பொதுமையாய் அமையும். நினைவுப்பரிசு கொடுக்கும் போது அனைவருக்கும் கொடுக்க வேண்டும். சிலருக்கு மட்டும் கொடுத்துவிட்டு சிலருக்குக் கொடுக்கவில்லையென்றால் பெறாதவர் மனநிலை என்ன பாடுபடும் என்பதற்கு அன்பளிப்பு சிறுகதை மிகச் சிறந்த சான்று. இக்கதையின் மூலம் சாரங்கனின் மன உணர்வினை அறிந்து கொள்ள முடியும. தன் மனதில் உள்ள இடைவெளியை முழுமைப்படுத்த தானே ஒரு டைரி வாங்கி வந்து எழுத்தாளரிடம் நீட்டும் போது அவர், அவனிடம் நான் என்ன எழுத என்று கேட்கையில், 'என் பிரியமுள்ள சாரங்கனுக்கு அன்பளிப்பு 'என்று எழுதிக் கொடுக்குமாறு கேட்கும் மனநிலையைப் பார்க்க முடிகிறது. இங்கு பிரியம் என்பது எல்லோருக்கும் பொதுவாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டுவதாகும்.

நடைமுறை வாழ்வியலில் கூட எந்தக் குழந்தையும் தனக்கு வேண்டும் என்று கேட்குமே தவிர பிறருக்குக் கொடுக்க வேண்டாமென்று கூறுவதில்லை. அவ்வடிப்படையில் அவர்கள் கதை மாந்தர்களை சிறப்பாக அமைத்துள்ளார். நாம் எவ்வளவுதான் உயர்ந்த நிலையில் வளர்ந்திருந்தாலும் குழந்தைகளின் மனநிலையிலிருந்து சிந்தித்துப் பார்த்தால் தான் அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியும் (Adhiyaman, 2011).

## படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுதல்

யாருக்குத் தேவையோ அவர்களுக்குப் புத்தகத்தைக் கொடுக்க வேண்டும் என்னும் நிலையில் சித்ரா, சுந்தரராஜன் ஆகியோருக்குப் பகிர்ந்து கொடுத்தமையும், மற்றவர்கள் அவர்களிடம் வாங்கிப் பகிர்ந்து கொள்வார்கள் என்ற நிலையில் கதைப்போக்கின் தன்மை அமைந்துள்ளது.

எழுத்தாளர் மாமா சுந்தரராஜன், சித்ரா ஆகியோருக்கே புத்தகங்களை வாசிக்க வழங்குவார். மற்ற குழந்தைகள் அதைப்பற்றி ஒன்றும் கவலை கொள்வதில்லை. சாரங்கன் மட்டும் அமைதியாக இருப்பான். ஆனால் ஆழ்மனம் என்ன நினைத்தது என்று யாருக்கும் தெரியாது. எந்த வகுப்பு பாஸ் பண்ணினால் இந்தப் புத்தகத்தைக் கஷ்டமில்லாமல் படிக்கலாம்? என்று ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு கேட்டான் சாரங்கன். அவன் கேள்விக்கு எழுத்தாளர், மனம் நோகாதாவாறு பதிலளிக்கும் முறைமை குழந்தைகளின் அறிவுசார் வளர்ச்சிநிலையை ஊக்குவிப்பதாகும். அத்துடன் நில்லாமல் உன் வயதில் இந்த அளவிற்கு நான் அறிவுடையவனாக இல்லை. நீ S.S.L.C வகுப்புக்கு வந்ததும் படிக்கலாம் என்று தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் போக்கு சிறப்புடையது (Adhiyaman, 2011).

## அறிவுத்தேடலில் குழந்தைகள் இணைந்தமை

இனிமையான செல்வமென்றே ஒவ்வொரு குழந்தையையும் சொல்வார்கள். இங்கு எழுத்தாளர் தன் தாயிடம் ஒவ்வொரு குழந்தையும் ஒரு பொக்கிஷம் என்று கூறும் முறைமை இதனோடு ஒத்துப்போகிறது. செயலாற்றுவது என்பது, தான் இருக்கும் பகுதி தொடங்கி பொதுமைப் பகுதியை நோக்கியது. இக்கதையில் எழுத்தாளருக்கு தான் சார்ந்துள்ளப் பகுதிகளை ஒட்டியுள்ளப் பகுதிகளில் உள்ள குழந்தைகளோடு பழகும் வாய்ப்பு ஏற்படுகிறது. அதனூடாய் குழந்தைகளிடம் பொதுமைப் பண்பும் ஏற்படுகின்றது. முதலில் வந்தமையால் சுந்தரராஜன், சித்ரா மீது தனித்த ஆர்வம் எழுத்தாளர் மாமாவுக்கு ஏற்படுகிறது. அதற்குப் பின்னர் மற்ற குழந்தைகளோடு பொதுவாகப் பழகியமையையும் அப்பழக்கம் நிலைத்து நின்றமையையும் காண முடிகிறது. இப்பழக்கத்திற்கு அன்பே முதன்மையாக உள்ளது (Adhiyaman, 2011).

## பராமரித்தலில் பொதுமை

ஞாயிற்றுக்கிழமை தோறும் குழந்தைகளுடன் நேரத்தை நகர்த்துவது எழுத்தாளரின் தொடர் வாடிக்கைச் செயலாகும். ஒரு ஞாயிற்றுக்கிழமை பிருந்தா வராதது கண்டு எழுத்தாளருக்கு வேதனை மிஞ்சியது. அவளின் நிலையறிந்து நேரில் பார்க்க நினைத்து, இல்லம் தேடி இன்றே செல்லலாம் என்று முடிவு செய்து, அம்மழலையின் வீட்டிற்குச் செல்கிறார். அவ்வழியில் வந்த எழுத்தாளரைப் பார்த்த சாரங்கன், எங்கள் வீட்டிற்கும் வரவேண்டும் என்று எதார்த்தமாகக் கேட்க, வேறுவழியின்றி அடுத்த வாரம் வருகின்றேன் என்று அரைகுறை மனதுடன் கூறும் எழுத்தாளரின் மனநிலையையும், குழந்தையின் ஆழ்மனம் அது உண்மையென்று முழுமையாய் நம்பிவிடும் நிலையையும் கதையில் பார்க்க முடிகின்றது. அந்நன்னாளைச் சந்திக்க முன்னமே ஆயத்தமாகி விடும் சிறுவனின் மனநிலையையும் ஆசிரியர் வழிப் பார்க்க முடிகின்றது.

பிருந்தாவின் உடல்நிலை சுகமடைவதற்காக அவ்வாரம் முழுவதும் குழந்தைக்குத் தன்னம்பிக்கையூட்டும் வார்த்தைகளை வழங்குவதால் அக்குழந்தை விரைவில் குணமடைகிறது. அதற்கிடையில் அவ்வழியாக எழுத்தாளர் வரும் போதெல்லாம் சாரங்கன், அடுத்த வாரம் வரவேண்டும் என்று நினைவூபடுத்திக் கொண்டேயிருக்கிறான். இதன் மூலம் அக்குழந்தையின் பேராவலையும், நச்சரிக்கும் போக்கினையும் காண முடிகின்றது.

சுந்தரராஜனுக்கும், சித்ராவுக்கும் எழுத்தாளர் தான், முன்னமே வாங்கியிருந்த டைரிகளைக் கொடுத்தார். மற்ற யாவரும் கேட்கவில்லை. சாரங்கன் மட்டும் வீட்டுக்கு வருவதை நினைவு படுத்தினான். தனக்குப் பிடித்தவர்க்குத் தானே அனைத்தையும் செய்ய வேண்டும் என்ற ஆசை குழந்தைகளுக்கு ஏற்படுவது இயல்பு. அவ்வடிப்படையில் ஒரு தட்டில் உப்புமாவையும், காபியையும்

கொண்டு வந்து வைத்து உண்ணுமாறு வற்புறுத்தி உண்ண வைத்தான். அவ்வேளையில் அக்குழந்தை காட்டும் அன்பிற்கு அளவேயில்லை. 'இந்த அன்பு என்னைத் திணற அடிக்கிறதே! இது தாங்க முடியாத அன்பு! தாங்க முடியாத பேதைமை---ஆனால். இந்த அன்புத் தொந்தரவு எல்லையில்லாத அன்பைக் காட்டுவதாக உள்ளது என்று கூறினாலும் எழுத்தாளர் அனைத்து குழந்தைகளையும் பராமரித்துச் செல்வது சிறப்பாக உள்ளது.

## விளிம்புநிலை மக்களின் வாழ்க்கை

குழந்தைகளின் மன நிலையைப் பற்றியக் கதைப்போக்கில் விளிம்புநிலை மக்களின் வாழ்க்கையையும் பிற்பகுதியில் காண முடிகிறது. தீபாவளி நாளன்று குழந்தைகளுக்கு தந்தையின் மூலம் புத்தாடை வழங்கப்படும். தந்தைக்குப் புத்தாடையாக சிறு துண்டு வாங்கப்படுகிறது. தாயம்மாளுக்கு புத்தாடை இல்லாவிட்டாலும் மகிழ்ச்சியோடு குழந்தைகளைப் பார்த்துக் கொள்கிறாள். இக்கதையின் மூலம் தாய்மையின் நேசக் கரத்தினைப் பார்க்க முடிகிறது. இக்கதையில் வரும் ராஜா என்னும் சிறுவன் அனாதையாக இருந்தாலும் வறுமையோடு வறுமையாக அவனையும் தன் குடும்பத்தில் ஒருவனாக எற்றுக்கொள்ளும் தாயம்மாளின் பாங்கு போற்றுதற்குரியதாக உள்ளது.

மனிதநேயத்தின் உச்ச கட்டத்திற்கே கதை செல்வதைப் பார்க்க முடிகிறது. மேலும், தன் கணவன் துண்டு அணிந்து செல்வதற்கு ஆண்டு முழுவதும் உழைக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளது. இந்நிலையில் அச்சட்டைத் துண்டை தாயம்மா ராஜாவிற்கு அணிவிக்கும் நிலையினைப் பார்க்க முடிகிறது. இங்கு இல்லாத நிலையிலும் தேவை உள்ளவர்களுக்கு உதவுவதே சிறந்த அறம் என்று நிலைப்படுத்துவதைப் பார்க்க முடிகிறது. மேலும் அவன் வரவை தங்கள் வீட்டிற்கு நாட்டை ஆளும் ராஜாவே வந்தது போல் கொண்டாடுகின்றனர்.

படைப்புகளில் கதையைச் சரியான இடத்தில் கூறி நிறுத்துவது தான் அவரது தனித்திறமையாகும். ஏழ்மை நிலையிலுள்ள சிறுவன் உடல் முழுவதும் சிரங்குகளோடு, ஒரு கோவணத்தை மட்டும் கட்டிக்கொண்டு எச்சில் இலையைச் சாப்பிட்ட ஒருவன் ராஜா என்று கூறுவது மேலோட்டமாகப் பார்க்கும்போது ஏற்றுக் கொள்ள முடியாததாய் இருக்கும். ஆயினும் எவ்வித எதிர்பார்ப்புமின்றி தனக்கே ஒன்றுமில்லாத இடத்தில் இருப்பதை விட்டுக் கொடுத்து உபசரிக்க ஒருவர் கிடைக்கப்பெற்ற அந்தச் சிறுவன் ராஜா தானே… என்னும் உணர்வைப் பெற முடிகிறது (Adhiyaman, 2011).

குழந்தைகள் உலகத்தை அவர்களுக்குள்ளே சென்று விவரிப்பது என்பது ஓர் அரிய கலை. இயல்பாகக் குழந்தைகள் விளையாட்டும் தற்பெருமை விளையாட்டினையும் சிந்தனா ஓட்டத்தையும் இயல்பாகக் கூறியமை அவருக்கே உரித்தான நடையாகும். வறுமை நிலையில் வாழ்க்கை அமையினும் மூன்று குழந்தைகளைப் பெற்றிருப்பினும் பிறருக்கு உதவும் செழுமை நிலையையும் இக்கதையின் மூலம் அறிய முடிகின்றது (Adhiyaman, 2011).

## படைப்பாக்கத்தில் ஆளுமை

அனைத்து உறவுகளுக்கும் மூலமாக உள்ள தாய்மையைத் தன் படைப்புகளில் பெரிதும் கதாசிரியர் போற்றியுள்ளார். 'ராஜா வந்திருக்கிறார்' கதையில் தாயார் தாயம்மாவை மிகவும் போற்றியுள்ளார். அழகம்மாள் கதையில், தன் தாயை ஒரு பாத்திரமாகவே படைத்துள்ளமையையும் காண முடிகிறது. அதே போன்று இரண்டு ஆண்கள் கதையிலும் தாய்மாமா ஒருவரை கதை மாந்தராகப் படைத்துள்ளமையும், திரிவேணி கதையில் விருப்பமான ராமர், சீதையை கதை மாந்தர்களாக படைத்துள்ளமையும், சிறப்பு (Adhiyaman, 2011).

'ஏமாற்றம், ஞாபகார்த்தம் 'என்னும் இரண்டு சிறுகதைகளும் அழகிய காதல் கதைகளாக அமைந்துள்ளன. நூலாசிரியர், சிறந்த நகைச்சுவையாளர் என்பதற்கு இரண்டு பெண்கள், இரண்டு ஆண்கள் சிறுகதைகள் சிறந்த சான்றுகளாக அமைகின்றன. திருமணம் ஆகாத ஒரு இளைஞனின்

மனநிலையைக் காட்டுவதாக இரண்டு பெண்கள் சிறுகதை உள்ளது. தற்காலத்திற்கும் பொருந்தும் தன்மையில் அமைவதைப் இக்கதையில் பார்க்க முடிகிறது.

## முடிவுரை

தற்கால உரைநடை இலக்கிய வடிவங்களில் சிறுகதைப் படைப்புகளைத் தரத்திலும் அளவிலும் மிகுதியாக எழுத்தாளர் கு. அழகிரிசாமி படைத்துள்ளமை போற்றுதற்குரிய பணியாகும். பல சிறுகதைத் தொகுப்புகளைப் படைத்திருப்பினும் 'அன்பளிப்பு' என்னும் சிறுகதைத் தொகுப்பு 'பொன் குடத்திற்குப் பொட்டு வைத்தாற்போன்று' அமைந்துள்ளமை நோக்கத்தக்கது. நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் படைத்திருப்பினும் 'அன்பளிப்பு' தொகுதியிலுள்ள சிறுகதைகள் மனித மனத்தில் காணும் ஆழ்நெறிகளை முழுமையாய் வெளிப்படுத்துபவையாக உள்ளன. இத்தொகுப்பிலுள்ள பன்னிரண்டு கதைகளில் அன்பளிப்பு, ராஜா வந்திருக்கிறார் என்னும் கதைகள் குழந்தைகளின் உளவியலை எதார்த்தமாகக் காட்டியுள்ளமையை அறிய முடிகிறது. தேவை உள்ளவர்களுக்கு அடிப்படையானவற்றைக் கொடுப்பது காலத்தின் கட்டாயம் என்பதைச் சமகால வாழ்வியலோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். பிற சிறுகதைகளிலும் நடைமுறை வாழ்வியலை ஒட்டியக் கருத்துகளைக் கூறியிருப்பதும் சமூகம் சார்ந்த படைப்பாயினும் படைப்பிற்குரிய அழகியல் நயங்களையும் முறையே கூறியிருப்பதும் சிறப்பனதாகும்.

## References

Adhiyaman, Pazha., (2011) Ku. Alagiriswamy Sirukathaikal, Kalachuvadu Pathippagam, Chennai, India.

Alagirisami, Ku., (1967) Anbalippu, Tamil Puthakalayam, Chennai, India.

Subramanian, S.V., (2003) Tholkaapiyam Thelivurai, Manivasagar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License